# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 10.09.2018-ம் தேதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01)** அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018ல் சொத்து வரி பொது சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கீழ்கண்டுள்ளவாறு சொத்து வரி உயர்வு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேலும் ஆற்காடு நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதனடிப்படையில் சொத்து வரி சீராய்வு செய்யவும் மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி, ஆற்காடு நகராட்சி பகுதிகளிலுள்ள 193 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், A, B மற்றும் C ஆகிய மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் உள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு கீழ்கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள அடிப்படை மதிப்பு (ரூ. / சதுர அடி) | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு (ரூ. / சதுர அடி) | |
|---|---|---|---|---|---|
| 1 | A | 41 | 1.00 | 1.70 | |
| 2 | B | 83 | 0.75 | 1.25 | |
| 3 | C | 69 | 0.45 | 0.75 | |
| | மொத்தம் | 193 | | | |

அரசாணை எண். 73 மற்றும் 76, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01.04.2018ம் தேதி முதல் ஆற்காடுநகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்கள் பொது சொத்து வரி சீராய்வு

செய்திடவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இம்மாநகராட்சி ஆற்காடு நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள்/ தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மணடலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் அடிப்படை மதிப்பு (Zone Value) நிர்ணயம் செய்யவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

__*அலுவலக குறிப்பு :-*__

1. *அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கலாம்.*
2. *ஆற்காடு நகராட்சியில் உள்ள சாலைகள் / தெருக்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு* A, B மற்றும் C என *மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.*
3. *அ) மண்டலம்* A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.1.00 லிருந்து ரூ.1.70 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   *ஆ) மண்டலம்* B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.0.75 லிருந்து ரூ.1.25 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

   *இ) மண்டலம்* C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.0.45 லிருந்து ரூ.0.75ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
4. *மேற்கண்டவாறு* A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பின்படி சொத்து வரி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2317/2018/அ1).

**ஆற்காடு** | **தனி அலுவலர்,**
**நாள்: 10.09.2018** | **ஆற்காடு நகராட்சி.**